1975 மார்ச் 7]

Distribution of soaps through Civil Supplies Corporation

* 225 Q.—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether there is any proposal to distribute groundnut oil, soaps, etc., to card holders through the stores opened by Civil Supplies Corporation; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) கடலே எண்ணெய், தூய்மைப்படுத்தப்பட்ட கடலே எண்ணெய், குளியல் சோப்புகள், சலவைச் சோப்புகள் ஆகியவை வாணிக அடிப்படையிலும், அவை கிடைப்பதைப்பொறுத்தும், உணவுப் பொருள் வழங்கு கழகத்தின் சில்லறைக் கடைகள் மூலம் விற்பனே செய்யப்படுகின்றன.

சிறுதொழில் வளர்ச்சிக்குக் கடன்கள்

* 226 வின—**திரு. கே. ரங்கனதன்:** மாண்புமிகு தொழில்-மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறுதொழில் வளர்ச்சிக்காக 1972-73-ம் ஆண்டில் அரசினுல் வழங்கப்பட்ட நிதி எவ்வளவு?

(இ) கோவை மாவட்டத்திற்கு மட்டும் வழங்கப்பட்ட நிதி எவ்வளவு?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) & (இ) 1972-73 ஆம் ஆண்டில் தமிழ நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகமும் தமிழ் நாடு தொழில் முதலீட்டு கழகமும் சிறுதொழில் களுக்கு வழங்கிய கடன்களின் விவரங்கள் அடங்கிய விவர அறிக்கை @ பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கே. ரங்கனதன்: தலேவரவர்களே, தற்சமயம் தொழில் வளர்ச்சிக்குக் கொடுக்கின்ற கடன்கள் நிறுத்திவைக்கப்பட்டிருக் கின்றன என்று சொல்கிருர்களே, அது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

@ 258-263ம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.